
723

உ
ஓம் சக்தி

# குரு அருள் உபதேச
# சோதி தரிசன நூல

723
4-55



78013

OFFICE OF THE REGISTRAR OF BO
1955

இல்லற ஞானி ராஜயோகி
ஸ்ரீ ... யா சுவாமிகள் அருளிய நூ
... ர்ம்ம சோதி பரமானந்த ச
... லாம்பட்டி
... ண்ட்டு திருப்புத்தூர்

Q2:22
N55
78013

உ

ஓம் சக்தி

# குரு அருள் உபதேச
# சோதி தரிசன நூல்

ஸ்ரீலஸ்ரீ வடுகய்யா சுவாமிகள் அருளியது

சத்தியபோத நிலையம் பிரம்ம சோதி பரமானந்த சபை
கருகப்பிலாம்பட்டி
கண்டவராயன்பட்டி போஸ்ட்டு
திருப்புத்தூர் (R. D.)

உ

ஓம் சக்தி

# முன்னுரை

இந்த நூலில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்து நான்கு கலைக்யானம், தொண்ணூற்ருறு தத்துவம், இன்னும் பெரும் புகழாகிய ரகசியங்கள் அடங்கியிருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ. வடுகையா சுவாமிகள் 11 ஆண்டுகளாக தொண்டாற்றி வருடந் தோறும் உபவாசமிருந்து கடவுளின் ஆசியைப்பெற்று அந்த இன்பங்களை மனிதசமுதாயம் உய்யும்பொருட்டு பெருநோக்குடன் வழிகாட்டி, நூலாகத்தொகுத்து அளித்திருப்பது பெரும் பாக்கியம். சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய நூல்களில், மத வேறுபாடுகளோ, கடவுளின் வேறுபாடுகளோ காணப்படவில்லை. மக்கள் ஒருமுகப்பட்டு கடவுளை வணங்குவதற்கு இன்றியமை யாத சாதனையாகவுமிருக்கிறது. கடவுளைப்பற்றி நம்முடைய அபிப்பிராயம் எது வேண்டுமானுலும் இருக் கட்டும், ஆனல் சுவாமிகளுக்கு கடவுள் என்ருல் மிக முக்கியமானதொன்று. தெய்வம் மனிதரூபம் என்ற அடிப்படையில் உண்மைப்பொருளாகிய கடவுளிடத்தில் அவர் கொண்டுள்ள நம்பிக்கைதான், அவரை ஒரு புதிய மனிதராக்கி இருக்கிறது. அந்த புதிய மனிதருடைய சக்தி, ஆவல், அன்பு, அறநெறி, ஒழுக்கம் முதலிய வற்றை அவர் ஒழுக்கத்தின் மூலம் நாம் உணர்கிருேம். ஏதோ ஒரு சோதி சொருபமாகிய சக்தி தம்முடன்


கூடவே இருப்பதாக அவர் உணர்கிறார். அந்த தெய்வீக சக்தி தம்மை முதலில் தொந்தரவு செய்து பிறகு தயக்கத்திற்குட்படுத்தி, கடைசியில் தம்மையே ஆட்படுத்திக்கொண்டு விடுவதாகவும் உணர்கிறார். இந்த அநுபவங்களே அவருக்கு கடவுளின் உண்மையை உறுதி கூறுவனவாயிருக்கின்றன, தமது மனதில் சந்தேகங்கள் உதித்த எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவற்றை கடவுளின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறார். கடவுளிடமிருந்து ஏதேனும் பதில் கிடைக்கிறதா? இல்லை என்றும் சொல்லலாம், உண்டு என்றும் சொல்லலாம்: இல்லை என்று சொல்வதற்கு இடமில்லை. சுவாமிகள் விடுத்த நூல்களில் உண்மையாகிய ஆத்மசக்தி அவர்கள் வாய்மையில் நின்றும் பிரகாசிப்பதை உண்ணு விரதத்தின் மூலமும் கர்மயோகத்தின்மூலமும் அறிகிறோம். இந்த மகத்தான சக்தியை உலகெலாம் பரப்பி மனித வர்க்கம் ஒருமுகப்பட்டு தீயவையை ஒழித்து, கடவுளை வணங்கி, கடைத்தேர புத்தக வடிவமாக வெளியிட்டு வழிகாட்டிய சுவாமிஜி அவர்களுக்கு உலக அறிஞர்களும் சபை அங்கத்தினர்களும், மாணுக்கர்களும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்: அதற்கான நிதியருளிய மெய்யன்பர்களையும் பாராட்டுகிறோம்; இந்த உபதேச நூலை அன்புக்கு உரியதாக்கி, பேரின்ப அமுதை பருகி இன்புற இறைவனை பிரார்த்திப்போமாக,

**G. சுப்பையர்**

கண்ணபிரான் பவர் பிரிண்டிங் பிரஸ்,
திருப்புத்தூர் (R. D.)

உ

ஓம் சக்தி



இல்லற ஞானி ராஜயோகி

ஸ்ரீலஸ்ரீ வடுகய்யா சுவாமிகள்

ஓம்சக்தி　　　　உ　　　　ஓம்சக்தி

ஓம்சக்தி
பரமபிதா துணை

11 வ்து ஆண்டுவிழாவில்

# ஸ்ரீலஸ்ரீ வடுகய்யா சுவாமிகள்

**3–5–53 ல் 21 நாள் உபவாசமிருந்து**

அருள் சுரந்து மொழிந்த

# உபன்யாசங்கள்

## கடவுளின் வரவேற்பு

வையமுழுதும் வேள்வி பெருக வான்திறந்து பொழியவே
வானலோக பரமநாதன் ஆவி வருக வருகவே
அய்ய வருக அன்பு வருக அருளே வருக வருகவே
அருப மலரே அழகே வருக அறனே வீருக வருகவே
தெய்வ ஒளியை எங்கும் பரப்ப தேவ வருக வருகவே
திருவே வருக மூர்த்தி வருக செல்வ வருக வருகவே
துய்யஉள்ளத்திருக்கும் பொருளே துணைவ வருகவருகவே
தொகுத்து நாவிற்குள்ளிருந்து சுயங்கள் பாடி அருளவே

ஆதி அமைத்துலகை அரசாளும் ஓர் குடைக்கீழ்
நீதி மொழி மானிடர்க்கு நேராக — ஓதிமறை
நன்னெறியை ஈந்தவனே நாவிலுரை வேதம்வர
சொன்னதருள் விண்ணிறையே துணை

அருபமே உருவாகி உடல் எடுத்து
ஆண் பெண்ணாய் அகிலமெல்லாம் ஆடும் ஆதி
சுருபமே தூலமொடு சூட்சமாகி
சுரந்து அருள் சுருதிமறை வகுத்துக்காட்டி
இருள் ஒளியாய் ரவி மதியாய் வானோராகி
இரவு பகலாகி நின்று இன்ப மல்கி
அருளமுது சுரந்து மழை பொழிந்து ஊட்டும்
அவரடியைத் தொழுது செகம் வாழ்க நன்றே

அன்னே அருப உயிரே பிதாவே காற்றே முகிலே வருக
கண்ணே ஒளியே கதிரே பரனே கருணைமழையே பொழிய
விண்ணே நதியே வெள்ளநிறைய வித்தேபெருக விறைவா
உண்ண உணவே உலகே தெளிய உளமே மகிழ உயிரே
மண்ணை உழுக பசியே தொலைய மனித தரும நிதியே
சென்ன விளைய செங்கோலுயற செகமே தொழுக அறனே
தன்னை உணர தவமே பெருக தரணிமுழுதும் மகிழ
சொன்ன மொழியே சுகமே பெறவே சுயமே அகரமுதலே

அகரமுதலே அறிவே வெளியே அண்டசரமே மவுன
உகர நெறியே உதயகிரியே உடலே பிராணமயமே
சிகரநடுவே சுழிமுனையே சிவாயநமவே சுடரே
மகர சிவனே சத்தி மயமே மணியே இரவு பகலே
வகர வழியே வருண செபமே வண்ணமிலாத பொருளே
நகர வசிய சிறசேபுருவ மேளம் குமுற தொனியே
பகர அறிதே பச்சை வருண பண்பேசயன அமுத
குகர இதய குருவே வருக கொஞ்சுதமிழை பொழிய

ஐவகையும் பொருள் நான்கு கறணமொடு மூன்றும்
அறியும் வகை உடலுக்குள்ளே அணுவையதில் நுழைத்து
செய்வினையுமிரண்டு மொன்றாய்த்திரட்டி ஒரு கூட்டில்
செவி நாக்கு மூக்கு கண்ணை தெரிய ஒளி வகுத்தான்
வாய்மையுடன் சரஜோதி வாணி சுயம் பாடும்
வாக்கதிகம் பெருந்தவசை வணக்கமுடன் கேளும்
பேய் மனித ரறியாமல் பிசகிப்போன மார்க்கம்
பிழைநீக்கி வாழ்வதற்குப் பேசுவேன் மூன்றாலே

அன்பான கண்மணியை அறிந்துளத்தில் பதித்து
அசைத்தாடி இருபுறமும் காக்குகின்ற ஒளியை
கண்ணான கண்மணியின் கருவையரியாமல்
காலமெல்லாம் வீண்காலமாய் போகுதே மெய்யிறையே
கனமான கருத்துக்குள்ளே கருதியறியாமல்
கர்மமெல்லாம் வீணுழைப்பாய் போகுதவனுயிரே
ஒன்றான ரூபமதில் அரூபையறியாமல்
உடலறியான் காலமெல்லாம் ஒன்றறியான் இறையே

நிலவுவொளி இரவுமதி நீ யென்றறியாமல்
நீடுலகம் போர்முனைக்குள்ளாகுதே மெய்யிறையே
அழகான உடலுக்குள்ளே அறிவு ஒளி துலங்கி
அகிலமெல்லாம் உன் கிருபையாகுதே தன்னுயிரே
மூலப்பொருள் மனிதகுலம் சத்தியமே தழைக்க
முன்னவனே உதவிசெய்வாய் முதலவனே ஆதி
உலகுதனில் உன்வடிவம் மனிதகுலம் வாழ்க
உருக்கமுடன் காக்ஷிகொடு ஒழுக்கநீதி உணர்க

இறையருளைத் தொழுதழுது இரக்கமனம் பெற்று
இல்லறத்தில் கொலை களவு இடும்பைகளை நீக்கி
அறனடியில் அன்புவைத்து அநுதினமும் வணங்கி
அனைத்துயிரும் அவன் வடிவம் அறிவுடையோர் தெரிந்து
திறமையுடன் நீதிநெறி கடமைகளைப் புரிந்து
தீவினையில்லாது வழி ஜீவியத்தை நோக்கி
குறையாத மெய்ப்பொருளை குவலயத்தோர் வணங்க
கொட்டிவிட்டான் வேதமெல்லாம் குறளையறிவீரே

நினைவோடு பொருள்தேடி நீதி நிலைநிறுத்தி
நெஞ்சாறத் திருநாமம் அகரமுதலெழுத்தை
அனைத்துலகுமறிய வென்றே திருக்குறளை வகுத்தான்
அறிவோடு நாமறிந்து அதன்படியே நடக்க
துணையாகு மிறையருளைத் தொழுது அடிபணிந்தால்
துய்யவன்றன் கிருபையினால் தோசமணுகாது
வினையான பலபிணியும் விலகுமது வென்று
வேத சட்ட முருப்படுத்தி விளக்குவதைப்பார்க்க

பூதஉடல் தானறிந்து புகழுடம்பை நாடி
புருவத்திடை இருமணியைப் புகுத்தி விளையாடி
ஆதரவா யகத்தினுள்ளே ரவி மதியுந்தானே
ஆடிவரும் சிறசினிடம் சுழிமுனையைக் காணே
கீதமொடு நாதசுரம் வீணையது கேட்கும்
கெடிமுழங்கும் வாணிசுயம் பாடி விளையாடும்
மாதவத்தின் யோகநிலை மர்மமதைச் சொன்னேன்
மானிலத்து மக்களெல்லாம் மகிழ்ச்சிகொண்டு பார்க்க

பார்ப்பதற்கு நல்லொழுக்கம் நீதி நெறி வேணும்
பஞ்சமாபாதகத்தை பரக்கவிடவேணும்
இயற்கையிலே இல்லறத்தில் நல்லறமே வேணும்
இருவினையாலெடுத்த சென்மம் கடைத்தேரவேணும்
சேர்க்கையிலே தெய்வநிலை திருவருளும் வேணும்
தேகமென்ற ஆலயத்தில் தெரிசிக்கவே வேணும்
கார்த்திகை தீபவொளி கண்டறிய வேணும்
கண்டவரைத் தெண்டனிட காட்டுவீரே சோதி

எட்டு ரெண்டும் தானறிந்து இடைநடுவில் புகுத்தி
இசை வாய்வை பிராணனொடு யேகவெளியாக்கி
தொட்டமூத்தி காட்டிவிடு குருவுநிலை தெரிய
சோதிதிரு வாசியது சுளி முனைமேலாடும்
விட்டகுறை தொட்டகுறை விதிவிலக்கு வேணும்
வேதாந்த சாரமெல்லாம் விபரமாகத் தோணும்
திட்டசட்டம் தேகமது கோவிலாகப் பார்த்து
தெரிசிக்க முத்தியது காட்சிநிலை யாகும்

காட்சிதரும் சூட்சமது வாசி நிலை யோகம்
கதிர்மதியின் சுடரொளியைக் காண்பதுவே நேசம்
ஆட்சிதரும் அருளொளியில் அடங்குவது பாசம்
ஆகாய வாணிவந்து அநுதினமும் பேசும்
பேச்சிமுத்துச் சோதியதைப் பேசிடவே கூசும்
பிரணவத்தின் ரகசியங்கள் பேசமுன்னால் வீசும்
நாச்சியிரு வாசிநிலைத் தேசிகனைப் போற்றி
நலம் பெருகு நால்வகுத்தான் நாட்டிலுள்ளோர் வாழ்க

இங்கு வந்து குழுமி இருக்கும் பாரதத்தாய் ஈன்ற அருட் செல்வர்களே கற்புடைய தாய்மார்களே எனது நன்றி எல்லோர்க்கும் உரியதாகி சக்தி உலகெலாம் பரவ நம்மைப்படைத்த கருணாகரக் கடவுளைப் பிரார்த்திக் கின்றேன்.

நாம் ஆண் பெண் வடிவமாய் அவதரித்த அதிசயமே அதிசயம். அதிலும் கூன் குருடு செவிடு பேடு நீக்கிப் பிறத்தல் பெரும்பாக்யம் உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம் உடம்பினில் உத்தமனைக்கண்டு தெரிசித்து வாழும்படி வேதம்முறை இடுகிறபடியால் கற்றோர்களைப் பின்பற்றி ஓதி உணர்ந்து நடப்போமேயானால் நல் லொழுக்கவழியே சென்று பூத உடலாகிய ஸ்தூலம் புகழுடம்பாகிய சூட்சமத்தோடு ஐக்கியப்பட்டு ஆனந்த வாழ்க்கையையடைகிறது தெய்வம் மனித ரூபமா என்ற தத்துவத்தை அறிந்த இல்லற ஞானியானவன் தான்பெற்ற இன்பத்தை உலக மக்களுக்கெல்லாம் அளிக்கின்றான் அவ்வழியே யான்சென்று 21 நாள் உபவாசமிருந்து அதன் ரகசியங்களை 10 ஆண்டு விளாக்களில் வெளியிட்டிருப் பதோடும் இந்தப் 11 வது ஆண்டுவிளாவிலும் வருங் காலத்தை தெரிவிக்கும் என் ஆவி சொல்வதை என்னிதய மலர்ந்து வெளியிடுகிறேன் இவ்வருஷ முதல் நாடுகள் சுபீட்சத்தையடையும் நல்ல மழைகள் பெய்து உல கெலாம் செழிக்கும் சில பகுதிகளில் மழையினால் பெருஞ் சேதம் யேர்ப்படும். ராஜாக்கள் பகைகள் குறைந்தும் குறையாது போர் மூண்டுகொண்டேயிருக்கும். ஒரு

சமயத்தில் நாடுகள் அழியப்படும் துஷ்டர்கள் எல்லாம் அழியப்படுவார்கள். கடவுள் இல்லையென்று சொல்லும் கூட்டமெல்லாம் 7 வருஷத்திற்குள் ஒழியப்படும் 1960 ல் தெய்விக ராஜ்யமாக மாறி மக்கள் சுபீட்சத்தையடைவார்கள். பிர நாட்டினர்களும் தடை நீங்கப்பெற்று நம் தேசத்துடன் நேசமாயிருப்பார்கள். நல்லடியார் கூட்டம் பெருகும் மெய்யன்பர்களே நாம் வேதநீதி நெறியின்படி நடந்து அதை அனுஷ்டானத்தில் மக்களுக்கு வழிகாட்டி உபதேசித்து கடமையில் நின்று தருமத்தைச் செய்து கடவுளை வணங்குவோமாக. உண்ணு விரதமிருக்கும் போது வேத வேள்வி யாகங்கள் எதற்கென்றும் அக்கினியை வளர்த்து நெய், ஓமம், தேன், பால், சூடம், சாம்பிருணி ஊதுபத்தி வாசனைத்திரவியங்கள் வார்ப்பது என்ன கருத்தென்றும் சில அன்பர்கள் கேள்வி போடுகிருர்கள் அதன் ரகசியத்தை விளக்குகின்றேன் (செவி உணவின் கேள்வி உடையார் அவிஉணவின் ஆன்ருேரோடு ஒப்பர் நிலத்து.)

## திருக்குறள்

அவிர்ப்பாகம் தேவர் உணவு அதாவது அக்கினியில் தேவர்களுக்கென்று இடப்படுகின்ற ஓமம் நெய் முதலிய அவி உணவுகள் செவி உணவாகும். அவி உணவாகிய உணவை செவிக்கு ஊட்டுபவர்கள் தேவர்களுக்கொப்பாவர். தேவரைப்போல் இவரும் அறிவும் இன்பமும் எய்தப்பெறுவர் திருக்குறளின் தெய்வப்புலவர் அறிஞரின் நூற் பொருளைக் கேட்டவர் துன்பமும் நீங்கி தேவருல

கத்தில் அநுபவிக்கும் இன்பத்தை இந்த நிலஉலகிற் பெருவர். (வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்) கற்றோர்களே, செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு ஈயப்படும். மன்னுலகிற் பிறந்த எவர்களானாலும் வேத ஆசாரப்படி நடந்தால் விண்ணவராகலாம் தேவர்களாகலாம். ஆவியாய் நிற்கும் அறிவுதனைக்காணில் ஓவியமாகும் உடம்பு வண்ணமில்லாத வடிவையறிந்துபின் விண்ணவராகும் உடம்பு இதைத்தெரிந்து யாகம் வளர்ப்பது நோய்வாய்ப்படாமல் வாழ்ந்து பிறவா நெறியையடையலாம்.

மல்குக வேதவேள்வி வளங்குக சுறந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பறவுக பக்திஇன்ப
நல்குக உயிர்கட்கெல்லாம் நான்மறை சைவ மோங்கி
புல்குக உலகமெல்லாம் புறவலன் செங்கோல்வாழ்க

இந்த நிலைமையில் நம் நாடு ராஜ்யம் திரும்பிவிட்டால் குடிகளும் அவ்வழியே செல்லும். சுதந்திரமென்பதை மக்கள் உணர்வார்கள். தேசியப் பாஷைகள் படிக்க வேண்டியது முக்கியம், அதைப்படித்து ஒருபுரம் கட்டி வைக்கவேண்டும். நமது தாய் பாஷை அரசியல் முதல் பரவவேண்டும். பெற்ற தாய்பாஷையை இழந்து மேநாட்டுப் பாஷையை வளர்ப்பதால் நம் நாட்டு ஆசாரத்தை பரப்ப முடியாது. தாய் தந்தையர்களுக்கு

கட்டுப்படாத படிப்பும் உபாத்தியாயர் சொல்வதை கேளாத படிப்பும் கற்பதில் பிரயோஜனமில்லை என்பதை மக்கள் உணரவேண்டும். ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பதும் முத்தமிடுவதும் மேல்நாட்டு அநாகரீகம் அந்தசினிமா அநாகரீகத்தை நமதுஅரசாங்கமும் மக்களும் தவிர்த்துக்கட்டவேண்டும்.

ஆணும் பெண்ணும் ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கக் கூடாது. தனித்தனியே படிக்கவேண்டும். தெய்வீக சக்தியும் கற்பும் வளரும், நம் நாட்டு ஆசாரம் ஒழுக்கம் பெருகும், வானஞ்சுறந்து பருவமழை பெய்துகொண்டே வரும், தெய்வீகப்படிப்பை இளமைப்பருவத்தில் புகுத்து வதற்கு அரசாங்க முனைந்துகொள்ள மக்கள் முயர்ச்சி பண்ணவேணும். தெய்வீக சக்தியால் முயர்ச்சி நன்ருய் கைகூடிவரும், நல்ல பலனைத்தரும் என்று என் இதய மலரில் விளையாடும் என் ஆத்மசோதி பறை சாற்றுகிறது.

மெய்யன்பர்களே நமது சபையைத் தலைமைதாங்கி நடத்திய **கு. ப. மகாலிங்கம் பிள்ளைக்கும்,** அட்வகேட் **R. சீனிவாச ஐயங்காருக்கும்,** பஜனைபாடிய சுப்பிரமண்ய தேசிக **கோஷ்டியாருக்கும்,** எனது மாணுக்கர்களுக்கும் பக்தகோடி **களுக்கும்** ஆயுளை நீடித்து வழங்க இறைவனைப் பிருர்த்திக் கின்றேன்.

ஓம் சக்தி

ஓம் சத்தியமே ஜெயம்

சுபம் சுபம் சுபம்

உ

பரமபிதா துணை.

மாதவ இறையே தூயமானிலத்து யிரைக்காக்கும்
வேதமும் வந்ததெங்கே விரைந்தருள்புரிவாய்நீதான்
காதுக்குள்தொனியே இன்பம் கண்ணுக்குப் பார்வை
வேதம்
போதிக்கும் நாவே பீடம் போற்றுவோர்க்கறிவே சோதி

**1. வேதம் படிப்பது எதற்கு**

நல்லொழுக்கத்தைப் பெறுவதற்கு

**2. நல்லொழுக்கமென்றால் என்ன**

வேதம் சொல்லியபடி நெறியில் நடப்பது

**3. விலக்கவேண்டியன யாது**

தீயொழுக்கம்

**4. தீயொழுக்கம் என்பது என்ன**

கொலை, களவு, மது, மாமிசமுண்ணுதல்,
சூது, விபச்சாரம் முதலியன

**5. இவைகளை நீக்கி நடப்பதால்
கிடைக்கும் பயன் யாது**

கல்வி, செல்வம், கீர்த்தி, இன்பம், மோட்சம்

**6. மோட்சமென்பது என்ன**

அறம், பொருள், இன்பம், இவைகளை
அனுபவித்து விட்டதே

**7. இது சுலபமாய் கிடைத்து விடுமா**

உண்மையாக நடப்பவர்களுக்கு கிடைக்கும்

**8. இல்வாழ்க்கையிலிருப்பவர்களும் இதை அடையமுடியுமா**

அடையலாம்

**9. எவ்வாறு இல்வாழ்க்கையிலிருப்ப வர்கள் அடையமுடியும்**

அன்பும் அறமும் கொண்டு நடத்தும் இல்லறத்தால் அடையலாம்

**10. அப்படி இல்லறத்திலிருந்து நடத்தி அதை உலகத்தாருக்கு சொல்லி யிருப்பது யார்**

தேவரெனக் கூறப்படும் திருவள்ளுவர்

**11. அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்**

அவர் இதைப்பற்றி என்ன சொல்லி இருக்கிறார்

**12. அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனு மது**

**13. இது என்ன**

இதுதான் அவர் உலகத்தாருக்கு உபதேசித்த திருக்குறள்

**14. தவம் என்பது என்ன**

தந்தை, தாய், தெய்வம், குரு ஜீவர்களிடத்தில் அருள்பக்தி முதலிய நிறைந்திருப்பது

**15. இப்படி நடத்திக்காட்டியது யார்**

மகாராஜா என்னும் துறவி

**16. அவர் என்ன செய்தார்**

குருவை அடுத்து துறவையடைந்தார்

**17. எப்படிப்பட்ட குருவை**

சிவர்களிடத்தில் அருள் பக்தி மெஞ்ஞானம்
ஆவதோர் வடிவாம் வேதமா முனியை

**18. அடைந்து என்ன செய்தார்**

தேவர்கள் தேவே, துன்பம் ஓர் காலும் சென்றிடா
முத்தியை சொல்லும் என்று கேட்டார்

**19. அவர் என்ன பதில் கூறினர்**

குருவை வழிபட்டு அவர் சொல்கிறபடி
நடக்கும்படி உபதேசித்தார்

**20. வேள்வி என்பது என்ன**

மூலாதார அக்கினியால் உண்டாகும் வாதனையாகிய
பசிப்பிணியை நீக்குவது

**21. யாகமென்பது என்ன**

செம்மதிப்பாலாகிய அமுர்தத்தை உண்ண அக்கினியை
வளர்த்தது தூக்கமாகிய சத்துருவை தகிப்பது

**22. அஜபா, மந்திரம் என்பது என்ன**

சூரியனின் பிரகாசம்

**23. சூரியன் மலர்வது யாது**

அறிவு

24. **அறிவு எங்கே பிறந்தது**

பஞ்சபூதமென்னும் இச்சரீரத்தில்

25. **இந்தச் சரீரம் எப்படி வந்தது**

விந்து நாதமும் கூடி உருவாகி வந்தது

26. **விந்து நாதமென்பது என்ன**

விந்து ஆண்கள் நாதம் பெண்கள் இருவர் கூட்டுறவால் உலகமியங்குகிறது

27. **வேதம் யாருக்கு**

மானிட வர்க்கத்திற்கே

28. **குரு யார்**

தன்னை யுணர்ந்த ஞானி

29. **பிறவிக்கொடி யாது**

பஞ்சபூதத்தாலியங்கும் ஆசை

30. **குருடன் யார்**

படித்துக் கெட்டவன்

31. **பயமுண்டாக வேண்டியது எதில்**

மரணத்தில்

32. **செவிகளால் உண்ணும் அமுதம் எது**

சாதுக்களின் உபதேசம்

33. **சாதுக்களென்று யாரைச் சொல்வது**

தன்னை உணர்ந்த ஞானிகளை

34. **கெட்டிக்காரன் யார்**

இல்லறத்திலிருந்து கர்மத்தை நீத்த ஞானி

35. **வறுமை யாது**

அடங்காத ஆசை

36. **எளிமை யாது**

தாழ்ந்தவன்பால் இரத்தல்

37. **தாழ்ந்தவன் யார்**

உலோபக்குணமுள்ளவன்

38. **சீவிக்கவேண்டியது யாது**

எத்தொழிலும் குற்றமில்லாத நடை

39. **மந்தபுத்தி யாது**

படித்தபாடத்தை அடிக்கடி படியாமை

40. **விழித்திருப்பவன் எவன்**

ஆராய்ச்சியுள்ளவன்

41. **தூக்கம் என்பது என்ன**

அறியாமை

42. **இன்பத்தைப் போதிப்பவன் யார்**

கடவுளை அறிந்து உணர்ந்த ஞானிகள்

43. **சைவம் என்பது யாது**

மன்னுயிர்களை தன்னுயிர்போல் நினைத்துக் காப்பது

44. **பயத்தைத் தருவன எது**

ஒழுக்கமில்லாத ஜீவனம்

45. **இரக்கமில்லாதவன் யார்**

மூர்க்கன் கொலைஞன் அகந்தையுடையவன்

46. **ஆயுள்வரை துன்பம் செய்வன எவை**

மறைவிற் செய்த பாவம்

47. **எவன் தாழ்ந்து போகிறான்**

தீயொழுக்கம் உடையவன்

48. **இவ்வுலகை வென்றவன் யார்**

சத்தியம், தருமம், நீதி, சாந்தமுடையவன்

49. **நண்பன் யார்**

மனிதவர்க்கத்தைப் பாவத்தினின்று விலக்குகிறவன்

50. **வீரனைவிட சூரன் யார்**

காமன் கணைகளால் பிறர் மனை நோக்காதவன்

51. **இரவு பகலும் சிந்திக்கத்தக்கன யாது**

நம்மைப்படைத்த கடவுளை

52. **மனிதர்களால் பேசத்தகாதன எவை**

பொய்யும் தன்னை புகழ்தலும் பிறர் குற்றமும்

53. **தேடவேண்டியன எவை**

கல்வி, செல்வம், கீர்த்தி, சத்தியம்

**54. உத்தம குணங்களை கெடுப்பன எவை**

பொறாமை என்னும் வஞ்சகம்

**55. உலகில் கற்பகக்கொடி யாது**

சத்திய சீலர்களாகிய முதல் மாணாக்கனுக்கு செய்யும் உபதேசம்

**56. அனைவருக்கும் தாயார் யார்**

சகல ஜீவர்களுக்கும் உணவுதரும் பூமி

**57. இந்த பூமிக்கு வித்து யாது**

சகல ஜீவர்களுக்கும் தந்தையாகிய ஆகிவானத்திலிருந்து விந்தைமழைவடிவாக இறக்குவது

**58. எவன் நன்னடக்கையுடையவன்**

வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டு நடப்பவன்

**59. வேத ஆசாரப்படி நடப்பவன் யார்**

அறிவில் சிறந்த தீர்க்கதரிசிகள்

**60. பூசிக்கத் தக்கவன் யார்**

சாந்தமுள்ள பண்டிதன்

**61. உடம்பெடுத்த பயன் யாது**

நோயற்ற வாழ்க்கை

**62. பலன் பெருவோன் எவன்**

உழவாளி

63. **எவனுக்குப் பாவமில்லை**

எந்தத்தொழிலும் செய்துகொண்டு கடவுளை நினைந்து செபம் செய்பவனுக்கு

64. **உலகத்தைத் தாங்குவது யார்**

நம்மைப்படைத்த கடவுள்

65. **உலகத்தையும் நம்மையும் படைத்த கடவுள் யார்**

கண்ணுக்குத்தெரியாது ஆட்டிவைக்கும் ஆவி

66. **ஆவியாகிய கடவுளைப் பார்ப்பது எப்படி**

குருவின் மூலம்

67. **அப்படிப்பட்ட நூல் எது**

திருவள்ளுவர் குறளும், அவ்வை குறளும்

68. **குறளாவது யாது**

சந்திரன், சூரியன், சுடர் என்னும் மூன்று மண்டலத்துள்ளிருந்து உதித்த தமிழின் ஓசைக் குறல்

69. **இதை எல்லோரும் அடைய முடியுமா**

குருவின் உபதேசப்படி நடப்பவர் அடையலாம்

70. **அரசன் யார்**

குடிகளை செழிப்புற நடத்திச் செல்கிறவன்

71. **குடிகளுக்குகவனம்எதிலிருக்கவேணும்**

உழவுத்தொழிலில்

**72. உழவுத் தொழில் என்பது யாது**

வரப்புயர்த்தி நீர்த்தேக்கி நெல் உயர்த்தி குடி உயர்த்தி அரசின்முடி உயரச்செய்வது

**73. இந்திரசாலம் எது**

கனவாகிய இந்த உலகம்

**74. பிராமணன் யார்**

பிர்மத்தை உணர்ந்தவன்

**75. யாரை வணங்க வேண்டும்**

வானத்திலிருக்கும் மும்மூர்த்திகளை

**76. கண்கண்ட தெய்வம் யார்**

பாலூட்டி வளர்த்த தாயார்

**77. பரிபாலிக்கும் குரு யார்**

தகப்பனார்

**78. அதற்கென்ன சான்று**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ஔவை வாக்கு

**79. இந்தக் கண்கண்ட தெய்வத்தை வணங்காத காரணமென்ன**

போதனை செய்யாத குற்றம்

**80. போதனையில் தெரிவதென்ன**

காயத்திரி சூரியன் அக்கினி சிவம் சரீரத்தில் விளங்கும் சக்திகள்

81. ***இந்தச்சரீரத்தில் இவை எல்லாம் இருப்பது உண்மைதானு***

சத்தியமாக இருக்கிறது

82 ***சகலவேதங்களும் பிறக்குமிடம்எங்கே***

நமக்குள் ஓமெனும்பிரணவத்தில்

83. ***பிரணவம் எங்கே இருக்கிறது***

கண், மூக்கு, செவி, நாக்கு, சிரசுக்குள்

84. ***இது என்ன பீடம்***

இதுதான் வேதம் பிறக்கும் ஓமெனும் கணேச பீடம்

85. ***பிரணவம் இருப்பது உண்மையா***

உண்மையிலும் உண்மையே

86. ***இந்த உண்மையை பிறரரிய என்ன செய்திருக்கிறீர்கள்***

பல நூலாகப் பாடி இருக்கிறேன்

87. ***அவை என்னென்ன நூல்***

ராஜயோக, நித்தியாநுப, சேந்தானப் பொக்கிஷத்
திரவுகோள், மனமறிவு, வினுவிடை, மனித தருமத்தை
புனிதமாக்கும் மகத்தான நூல். அச்சமின்றி வாழ்தல்
அருள்நெறி ஒழுக்கமெனும், ஆத்மீக நூல்.
தேவரகசியத்தின் ஒளிதரிசன விளக்கம் தெய்வ
தெருசனேயிற் வழிபாடுகளே எனது அன்பர்கள்
வெளியிட்டிருக்கிறுர்கள்

**88. இந்த நூல்களை வாங்கிப்படித்தால் கடவுளை பார்க்க முடியுமா**

பார்க்கலாம். பஞ்சமா பாதகத்தை ஒழித்த அன்பர்கள் தெரிசிப்பார்கள்

**89. உபதேசம் யாருக்குச் செய்வது**

பஞ்சமா பாதகத்தை விட்ட சத்திய சீலர்களுக்கு

**90 இந்த உபதேசம் பொருள் வாங்கிக்கொண்டு செய்வதா**

இல்லை. மனிதகுலம் சத்தியத்தோடு வாழ்வதற்கு போதிக்க வேண்டிய கடமை

**91. ஒன்றையும் இச்சிக்காது செய்வதுதான் குரு மார்க்கமோ**

ஆம். அதற்கென்ன சந்தேகம்

**92. அப்படி யார் இந்த உலக மக்களுக்கு போதித்திருக்கிறார்கள்**

தெய்வப் புலவர் திருவள்ளுவர், ஔவைபிராட்டியார், திருவாசகத்தை வகுத்த நால்வர்கள் பெரும்புகழ் படைத்த கண்ணபிரான், சித்தர்கள்.

**93. சத்திய போதனை எதற்கு**

கொலையில்லாமல் பாதகத்தை நீக்கி வாழ்வதற்கு

**94. உயிர்வதை இல்லாது வாழமுடியுமா**

முடியும். அன்னத்தாலாய உடம்பு அகிம்சையே நம் நாட்டு ஆசாரம்

95. **இதை ஏன் பரப்பாமல் மேல் நாட்டுப் பாசை பரவுகிறது**

அவர்களோடுநாம் ஐக்கியப்பட்டிருந்த வாசனை வரவர நசித்து நம் நாட்டு அகிம்சைதான் அகிலமும் பரவப்போகிறது

96. **அது எவ்வளவு காலம் பிடிக்கும்**

இன்னும் 7 வருஷத்திற்குள்

97. **ஏழுவருஷத்திற்குள் முடிவு என்ன**

கெட்டவை எல்லாம் ஒழிந்து 1960ல் நம் நாட்டு அகிம்சை அகில உலகமும் பரவிடும்

98. **உனக்கு என்ன தொழில்**

உழவு

99. **உழவுத்தொழில் செய்துகொண்டு கடவுளை அடைய முடியுமா**

எந்தத்தொழிலும் செய்துகொண்டு சத்தியத்தோடு இருப்பவன் கடவுளை அடையலாம்

100. **சும்மா இருந்து அடைய முடியுமா**

சோம்பேரி சுகமடையமாட்டான்

101. **உங்கள் குலமென்ன**

சுக்கில குலம்

102. **சுக்கில குலமென்றுலென்ன**

விந்து நாதம் ஆண், பெண் கூட்டுறவால் அவதரித்த மனித குலம்

103. ***மனிதகுலத்துக்குத்தான் வேதமோ***

ஆம்

104 ***நீ அறிந்ததை பாட்டாகப்***
***பாடத்தெரியுமா***

தெரியும்

105. ***எங்கே பாடு***

பாடுகிறேன் மானிடரே கேளுங்கள்

1. ஆதி அநாதி மருந்து இங்கே
ஆணுகிப் பெண்ணுகி ஆடும் மருந்து

2. நாத விந்தான மருந்து நம்முள்
நாதாந்தப் பேரொளி நாட்டமருந்து

3. ஓதி ஒழுகும் மருந்து நன்கு
உள்ளொளிகாட்டி ஒடுங்கும் மருந்து

4. சத்தியமான மருந்து உலகோர்
சமரசமானதோர் சமய மருந்து

5. என்னுள்ளே பாடும் இறைவன் மற்றும்
எல்லோர்மனத்திலுமிருப்பதினுலே

6. உண்மைசொல் உன்னருளாலே நம்
உத்தமர் கூடி உலாவலாமேலே

7. அறத்துப்பாலாதி பகவன் நாம்
ஆண் பெண்ணுய் வந்தோமதற்கு பின்னுலே

8. காமப்பால் விந்து கலந்து பின்
கயிலாய தேகத்தைக் கண்டோம் கண்ணாலே

9. இகபர மோட்சமும் உள்ளே, முன்
இறைவனைப் போற்றியே இன்புற்றுக் கொள்ளே

10. வரம்புக்குள் நின்றுமே வாழ்த்தி, உன்
வாக்கைப் புகழ்ந்து வருணிப்பேன் சொல்லே

11. ஆண் பெண்ணும் ரூபத்தினாலே, பின்பு
ஆகாயக்கோட்டை அமைந்தது மேலே

12. சந்திரர், சூரியர் சக்கரத்தாலே, நின்
சரம்மாறி ஓடுது வாசியினாலே

13. வானம் வழங்கி வருஷிப்பதாலே தன்
வாழ்க்கைத் துணைக்கி வரம்புக்கு நூலே

14. விண்ணே ஒளிபச்சை மேலே தான்
வித்தை யறிந்தால் விளங்குந் தன்னாலே

15. ஆவிக்கு மேலான ஓவியமில்லை தன்
அறிவிக்கு மேலான தெரிசன மில்லை

16. இருளை விரட்டும் பிரகாசம்போலே தன்
இல்லறம் நல்லறம் இன்புறும் சோலை

17. கொலை பலி உயிர்வதை நீக்குவதாலே தன்
குஞ்சரச் சோதி குலாவுந் தன்னாலே

18. நல்லறமாக நடத்தும் முப்பாலே தன்
நாடு செழிப்பது நன்மையினாலே

19. செவிமணி ஓசை திறக்குந்தன்றலே தன்
செந்தமிழ் இன்பம் சிரசுக்குள்ளாலே

20. அந்தரச்சோதி முன்றுடுவதாலே தன்
அன்பரெலாம் கூடி அமர்ந்திடு சோலை

21. இன்பமிருக்குது எல்லோருக்குள்ளே நம்
எல்லா மதத்தையும் ஒன்ருகக் கொள்ளே

22, சாதி பேதங்களை நீக்கும் அதை
சங்கையறவோத வேதமுமாக்கும்

23. ஓத ஒரு குலந்தானே வேதம்
ஓதாதார் வீணே இழிகுலந்தானே

24. எல்லோரும் வாங்களே கூடி நல்ல
இறையருள் ஆட்சியை இதயத்தில் பாடி

25. செல்வோமே கடவுளைத்தேடி நம்மள்
சிங்கார உலகத்தில் செல்வத்தை நாடி

26, அல்லும் பகலும் உழைத்து இங்கே
அணுவைத்துளைத்தெழு கடலைப்புகட்டி

27. தெரிய வழியதைக் காட்டி இந்த
தேசம் செழிப்புற செங்கோலை ஓட்டி

28. அரிய தவத்தோரைக்கூட்டி ராச்சியம்
அமரர்திருக்குறள் ஆச்சியைப் பூட்டி

29. நெறியைப் பறப்பியே மாட்டி நீங்கள்
நேசித்துக் குடிகளைப் பிரசாரம் காட்டி

30\. குடிகள் உயர்ந்திடப் பொங்கும் நம்மள்
குடியாட்சிமேலே கிரீடமும் தொங்கும்

31\. பசிப்பிணி எல்லாம் பறக்கும் இந்தப்
பாரத தேசம் பலனைப் பெருக்கும்

32\. போதனையாலே சிறக்கும் இந்த
பூலோகமெல்லாம் புனிதம் பிறக்கும்

33\. சத்தியமானதோர் வாக்கு வேதம்
சந்ததி வாழவே சொன்னது நாக்கு

34\. சித்தாதி முத்தர்கள் போக்கு இதைத்
திரட்டியளித்தது சிறியனின் வாக்கு

35\. கடவுளும் நின்றுமே காக்கும் நம்முள்
கருணைவடிவாய் கதிர்மதி தேக்கும்

36\. சூரியப்பிரகாசம் போலே நீங்கள்
சுகமாக வாழலாம் சோதிப் பின்னாலே

37\. தேரியபொன் மனத்தாலே நானும்
தெரியவே பாடினேன் என்குணத்தாலே

38\. கூடியே செங்கோல் சிறக்க இந்த
குவலயமெல்லாம் குடியாட்சி பொங்க

39\. ஆடியவேதத்தை நாடி எல்லோரும்
ஆனந்த சுதந்திரக்கொடியதைப்பாடி

40\. வானவர் மேலோனைத்தேடி மேடையில்
வடுகய்யா கூறிடும் பாவதைப்பாடி

41. கொலைக்களமில்லாத ஆட்சி ராஜாங்கம்
கூட்டிச் சிறக்கவே திருக்குறள் சாட்சி

42. சித்தாதி முத்தர்கள் வாழி இந்த
தேசம் செழிப்புறச் செங்கோலும்வாழி

43. கர்த்தன் திருவருள் வாழி நம்
கண்ணைத்திறந்த கதிர்மதி வாழி

44. மாதா, பிதா, குரு வாழி மௌன
மாசற்ற சோதிமணிக்கொடி வாழி வாழியவே

கரும்புருசி தருமதுர மொழியதனைக் கருத்தில்
வைப்போர்
பெரும்புகழின் கடவுளருள் பிரணவத்தின்
ஓசைகேட்கும்
அருந்தவசை ஈன்றளித்தேன் அன்பற்கெல்லாம்
வரும் பிறவிதனைமாற்றும் அருளமுது சுரந்து வழி
காட்டுந்தானே

---

கண்ணபிரான் பவர் பிரிண்டிங் பிரஸ், திருப்புத்தூர் R. D.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 6 | 10 | வாளும் | வாழும் |
| | 12 | வளியே | வழியே |
| | 13 | புகளுடம் | புகழுடம் |
| | 17 | அவ்வளியே | அவ்வழியே |
| | 18 | விளா | விழா |
| | 19 | விளா | விழா |
| 7 | 7 | நெரி | நெறி |
| | 17 | ஆண்று | ஆன்று |
| 8 | 5 | மன்னுலகிற் | மண்ணுலகிற் |
| | .. | சிரிது | சிறிது |
| | 9 | வடிவையறிந்து | வடிவையறிந்த |
| | 12 | சுறந்து | சுரந்து |
| | 18 | பாசை | பாஷை |
| | 20 | பாசை | பாஷை |
| | 22 | மேநாடு | மேல்நாடு |
| 9 | 10 | சுறந்து | சுரந்து |
| | 12 | அரசாங்க | அரசாங்கம் |
| | 13 | வேணும் | வேண்டும் |
| 11 | 23 | முதலிய | முதலியன |
| 12 | 15 | உன்டாகும் | உண்டாகும் |
| | 19 | வளர்த்தது | வளர்த்து |
| 19 | 12 | பிறரரிய | பிறரறிய |
| | 17 | திரவுகோள் | திரவுகோல் |
| | 18 | புணிதமாகும் | புனிதமாகும் |
| 21 | 10 | பரவிடும் | பரவிவிடும் |
| | 21 | பாசை | பாஷை |
| | 22 | பாசை | பாஷை |
| 23 | 14 | யளிந்தால் | யறிந்தால் |
| | .. | தன்னால் | தன்னாலே |

கண்ணடீஸ்வரர் பவர் பிரிண்டிங் பிரஸ்,

திருப்புத்தூர் R. D.